**செய்தி வெளியீடு எண்: 374** **நாள்: 09.06.2018**

**மாநில திறன் மாநாடு 2018**

மாநில திறன் மாநாட்டின் துவக்க விழா 09.06.2018 அன்று காலை சென்னை, கிண்டி அட்வான்ஸ்டு டிரெயினிங் இன்ஸ்டிடியூட்டில் நடைபெற்றது. இம்மாநாட்டில் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு. டி.ஜெயக்குமார் அவர்கள் மற்றும் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபீல் அவர்கள் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி மாநாட்டைத் துவக்கி வைத்தனர். இம்மாநாட்டில் கலந்து கொண்டவர்களை தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திருமதி. பா.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார்கள். தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அரசு முதன்மை செயலர் திரு. மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப., அவர்கள் இம்மாநாடு குறித்து திட்ட உரையாற்றினார்கள். மாநில திறன் மாநாடு மற்றும் திறன் படைப்புகளின் கண்காட்சியைத் துவக்கி வைத்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் சிறப்புரை ஆற்றினார்கள். தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெ.ஜெயவர்தன் அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். தொடர்ந்து மாநாட்டில் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. இம்மாநாட்டில் மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த திறன் படைப்புகள் காட்சிப்படுத்தப்பட்டன. இத்திறன் படைப்புகளின் கண்காட்சியினை அமைச்சர் பெருமக்கள் பார்வையிட்டனர். மாநாட்டில் கலந்து கொண்டவர்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் செயல் இயக்குநர் திரு. கிள்ளி சந்திரசேகர், இ.ஆ.ப. அவர்கள் நன்றியுரை ஆற்றினார்கள்.

பிற்பகல் 3.00 மணியளவில் இந்தியாவின் திறன் மேம்பாட்டுக்கான சிறந்த நடைமுறைகள் குறித்து கருத்தரங்கம் நடைபெற்றது. இம்மாநாட்டில் மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்ட சிறந்த திறன் படைப்புகள், வல்லுநர் குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டு, சிறந்த திறன் படைப்புகளுக்கு, 10.06.2018 அன்று பிற்பகல் நடைபெறும் நிறைவு விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் முதல் பரிசாக ரூ.1 இலட்சமும், இரண்டாம் பரிசாக ரூ.50,000/-மும் வழங்கப்பட உள்ளது. 10.06.2018 அன்று காலை மாநில திறன் மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளாக, தமிழ்நாட்டின் திறன் சூழல் – திறன் முனைப்புகள் மற்றும் வாய்ப்புகள் மற்றும் உலக அளவிலான திறன் பயிற்சி குறித்த சிறந்த நடைமுறைகள் ஆகிய தலைப்புகளில் கருத்தரங்கங்கள் நடைபெற உள்ளன. திறன்மிகு தமிழகத்தை உருவாக்கும் ஒரு புதிய முயற்சியாக நடைபெற்ற இம்மாநாடு திறன் பெற்ற இளைஞர் சமுதாயம் தம் திறனை வெளிப்படுத்த கிடைத்த ஓர் அரிய வாய்ப்பாக அமைந்துள்ளது. இந்நிகழ்ச்சி தொடர்பான விரிவான ஏற்பாடுகள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. இத்தகவலை திருமதி பா.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் அவர்கள் தெரிவித்தார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**